தமிழ் நாடு சட்ட மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்றத்தின் நாற்பத்தொன்றுவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1972 ஏப்ரல் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில், காலை 9-30 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு அவர்கள்) தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் பிரமாணம் அல்லது உறுதிமொழி

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, சட்ட மன்ற மேலவைக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேர்தல் அண்மையில் நடந்து முடிந்த பின்னர், மேலவை முதல் முறையாகக் கூடும் இக் கூட்டத்திற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பது எனக்கு மட்டிலா மகிழ்ச்சி யளிக்கிறது. இந்த மேலவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்மரையும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதின்மரையும், புதிதாக நியமனம் செய்யப் பட்ட மூன்று உறுப்பினர்களையும் நான் மனமார வாவேற்றுப் பாராட்டுகிறேன்.

இந்த மேலவையின் உறுப்பினர்கள் விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் உயர்ந்த தரத்தினைக் கடைப்பிடித்து வந்துள்ளனர்; ஒப்புரவு, ஒருவரை யொருவர் மதித்து நடத்தல், கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்த மரபுகளையும் வழக்காறுகளையும் நிலைநாட்டி உள்ளனர். இந்த மேலவையின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கட்டிக் காப்பதில் உங்கள் அனைவரின் உதவியையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பெறுவேன் என்பதில் எனக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

இந்திய அரசியலமைப்பின் 188-வது பிரிவில் சொல்லியுள்ளபடி, புதிய உறுப்பினர்களுக்குப் பிரமாணம் அல்லது உறுதி மொழி செய்விப்பது இப் போது மேலவையின் முன்னுள்ள அலுவலாகும். இம் மன்றத்தில் கடைப் பிடித்து வரும் மரபினையொட்டி மேலவைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பெயரை முதலில் படித்துவிட்டு, அதன் பின் ஏனைய உறுப்பினர்களின் பெயர் களை அகர வரிசைப்படி படிப்பார். மாண்புமிகு உறுப்பினர்கள் மேடைக் கருகே வந்து, பிரமாணம் அல்லது உறுதி மொழியை எடுத்துக்கொண்டு பதி வேட்டில் கையெழுத்திட்டுவிட்டு அவைத் தலைவருடன் கைகுலுக்கி, பின் தங்கள் இருக்கைகளுக்கு திரும்பிச் சென்று அமருமாறு வேண்டிக் கொள் கிறேன்.

சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 3-எஎஎ விதியின்கீழ் உறுப்பினர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறவரை, அந்த உறுப்பினர்கள் காலியாக உள்ள இருக்கையில் எதில் வேண்டுமானாலும் அமரலாம்.

(பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர் :—

1. *திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி (த)
2. * திரு. எம். எம். பாக்கர் (த)
3. * திரு. எல். பலராமன் (த)
4. திரு வி. எம். தேவராஜ் (த)
5. * திரு. கே. எஸ். கணபதி (ஆ)
6. * திரு. ஜார்ஜ் கோமகன் (த)
7. திரு. எம். மாசிலாமணி (த)
8. திரு. எஸ். முத்து (த)
9. திரு. டி. வி. முத்துகிருஷ்ணன் (த)
10. திரு. எம். கே. டி. நடராஜன் (த)
11. திரு. சி. வி. இராஜகோபால் (த)
12. திரு. ஜி. என். இராஜு (த)
13. திரு. காரைக்குடி இராமசுப்பையா (த)
14. * திரு. ஆர். சக்திமோகன் (த)
15. திரு. இரா. சாம்பசிவம் (த)
16. திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை (த)
17. திரு. டி. சந்தோஷம் (த)
18. * திரு. ம. பொ. சிவஞானம் (த)
19. * திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (ஆ)
20. * திரு. வில்சன் அப்பலோஸ் (ஆ)
21. * திரு. எ. ஆர் தாமோதரன் (ஆ).

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : இந்த மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து, அவை நாளை காலை 10-30 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

---

* கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

(த) தமிழில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

(ஆ) ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 ஏப்ரல் 28]

A. Statutory Rules and Orders

106. Order issued with G.O.R. No. 491, Revenue, dated the 6th March 1972, in regard to exemption from liability to entertainments tax of the film show organised by the Manageress, Gem Nursery School, Kodambakkam at Palaniappa Talkies, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

107. Order issued with G.O. R. No. 87, Revenue, dated the 13th January 1972, in regard to exemption from liability to entertainments tax of the film show organised by the Station Commander, Air Force Station, Tambaram proposed to be held on 23rd January 1972 at Devi Paradise in aid of the Air Force Wives Welfare Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).].

108. Order issued with G.O.R. No. 350, Revenue, dated the 14th February 1972, in regard to exemption from liability to entertainments tax of the film show to be held at Coimbatore by the Yuvak Mandal, Coimbatore, in aid of National Defence Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).].

109. Notification issued with G.O. Ms. No. 241, Revenue, dated the 28th January 1972, in regard to exemption from registration fee to all the dealers dealing exclusively in toddy, the sale of which is exempted from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

110. Order issued with G.O.R. No. 402, Revenue, dated the 25th February 1972, in regard to exemption from liability to entertainments tax of the film show Mogamanusulu, subject to the condition that the gross collections and the amount of show tax are handed over to the Collector of Madras towards National Defence Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

111. Order issued with G.O.R. No. 2161, Revenue, dated the 30th November 1971, in regard to exemption from liability to